


**26.10. 2024**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் வளர்ச்சியில் பழங்குடியின மக்கள் பங்களிப்பின் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. நாடுகளிடையே படைப்பாற்றல் திறன் பரிவர்த்தனைகளை உலக வங்கி முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. சென்னை மெட்ரோ ரயில் திட்ட இரண்டாம் கட்ட பணிகளை விரைவுபடுத்த முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மத்திய அமைச்சரை கேட்டுக்கொண்டுள்ளார்.

4. கன மழையால் பாதிக்கப்பட்ட மதுரையில் மீட்பு பணிகளை மாநில அரசு முடுக்கிவிட்டுள்ளது.

5. நியூசிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது 2-வது இன்னிங்சில் சற்றுமுன் 5 விக்கெட் இழப்பிற்கு 160 ரன் எடுத்திருந்தது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**************

<u>குடியரசு தலைவர்</u>

இயற்கை சார்ந்த வாழ்க்கை அனுபவங்களால் பழங்குடியின மக்கள் அறிவாற்றலில் மேம்பட்டு திகழ்வதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

சட்டிஸ்கட் மாநிலம் பிலாய் இந்திய தொழில்நுட்ப கல்வி கழக பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், பழங்குடியினரின் வாழ்க்கை முறை மூலம் நீடித்த வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பை வழங்க முடியும் என்று சுட்டிக்காட்டினார்.

வளர்ச்சிபாதையில் பழங்குடியின மக்களின் பங்களிப்பு இருந்தால் மட்டுமே, நாடு முழுமையான வளர்ச்சிபெற முடியும் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

பல நூற்றாண்டுகளாக சுற்று சூழலுடன் ஒருங்கிணைந்து இயற்கையை புரிந்து அதற்கேற்ப பழங்குடியினரின் வாழ்க்கை அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் 7 மாணாக்கருக்கு தங்க பதக்கங்களை குடியரசு தலைவர் வழங்கினார்.

சுகாதார அறிவியல் ஆயுஷ் பல்கலைகழகத்தின் பட்டமளிப்பு விழாவிலும் குடியரசு தலைவர் இன்று பிற்பகல் பங்கேற்கிறார்.

**************

<u>மன்-கீ-பாத்</u>

பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 115-வது முறையாக நாளை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்

நமோ செயலி, தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூ டியூப் அலைவரிசைகளில் இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பப்படும்.

தொடர்ந்து இரவு 8 மணிக்கு இதன் மொழியாக்கம் இடம்பெறும்.

**************

நிர்மலா சீதாராமன்

படைப்பாற்றல் திறன் பரிமாற்றங்களை முன்னெடுத்து செல்வதற்கான நடவடிக்கைகளை உலக வங்கி மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

வாஷிங்டனில் உலக வங்கியின் எதிர்கால முன்னேற்பாடுகள் என்ற தலைப்பிலான அமர்வில் உரையாற்றிய அமைச்சர், மின்னணு உள்ளடக்கம், நீடித்த எரிசக்தி பிரிவுகளில் தென்னாடுகளின் அனுபவங்களை நடைமுறை படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நடுத்தர வருவாய் வங்கிகளுக்கு கூடுதல் கடன் உதவிகள் வழங்குவது, வளர்ச்சி பாதையை வலுப்படுத்துவது போன்ற செயல்பாடுகளால் இலகுவான நடைமுறைகளை உலக வங்கி மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரினார்.

தரவுகள், சான்றுகள் அடிப்படையிலான அணுகுமுறையை உலக வங்கி மேற்கொள்ள வேண்டும் என்ற முடிவில் இந்தியா உறுதியாக இருப்பதை நிதியமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார்.

உலக நாடுகளுக்கான கொள்கை சார்ந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அமைச்சர் உலகளாவிய பொருளாதாரம் மீண்டெழுந்து வலுப்பெற்றிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

இதனால் மத்திய வங்கிகள் நிர்ணயித்த இலக்குகளை பல்வேறு நாடுகள் எட்டியிருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

**************

நிதிகாரே

இருசக்கர வாகன ஓட்டிகளின் நலன் காக்கும் வகையில் தரமான தலைகவசங்களின் விற்பனையை வலியுறுத்தி மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பிரச்சாரங்களை முன்னெடுக்க வேண்டும் என்று, மத்திய நுகர்வோர் பாதுகாப்புத்துறை அறிவுறுத்தியுள்ளது.

சந்தைகளில் விற்கப்படும் தரமற்ற தலைகவசங்களை அகற்றுவதோடு, நுகர்வோருக்கு தரமான பாதுகாப்பான ஹெல்மெட் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் இத்துறையின் மத்திய செயலர் திருமதி நிதிகாரே கூறியுள்ளார்.

டீ. ஐ. ஸ் தர சான்றிதழ் பெற்ற பொருட்களின் முக்கியத்துவம் குறித்து அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் மாவட்ட ஆட்சியர்கள், இந்த பிரச்சாரத்தை மேற்கொண்டு குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

**************

தேர்தல்

ஜார்கண்ட் மாநிலத்தில் 43 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு வரும் 13ஆம் தேதி நடைபெறும் முதற்கட்ட வாக்குப்பதிவிற்கு ஆயிரத்து 609 வேட்பாளர்கள் தாக்கல் செய்துள்ளனர்.

வேட்புமனுக்கள் நாளை மறுநாள் பரிசீலிக்கப்படுகின்றன.

மனுக்களை திரும்பபெற வரும் புதன்கிழமை கடைசி நாளாகும்.

**************

பட்டமளிப்பு

புதிய கல்வி கொள்கை உலக அளவில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்தின் 31ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று சிறப்புரையாற்றிய அவர், 2047ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் சமுதாய வளர்ச்சி, பொருளாதாரம் உள்ளிட்டவைகளில் இந்தியா வல்லரசாக திகழும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் 97 பெண்கள் உட்பட 571 பேருக்கு ஆளுநர் பட்டங்களை வழங்கினார்.

**************

முதலமைச்சர் மெட்ரோ

சென்னை மெட்ரோ ரயில் திட்ட இரண்டாம் கட்ட பணிகளை விரைவுபடுத்த முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் மத்திய நகர்புற வளர்ச்சித்துறை இணை அமைச்சர் திரு.மனோகர்லால் கட்டாருடன் இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆலோசனை மேற்கொண்ட முதலமைச்சர், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் இப்பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்க கோரினார்.

63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் மதிப்பில் 3 வழிதடங்களில் 118.9 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட பணிகள் நடைபெற்று வருவதை சுட்டிக்காட்டிய முதலமைச்சர் மெட்ரோ ரயில் சேவையால் லட்சக்கணக்கான பயணிகள் பயனடைந்து வருவதாக எடுத்துரைத்தார்.

**************

முதலமைச்சர் - மதுரை

கன மழையால் பாதிக்கப்பட்ட மதுரையில் போர்கால அடிப்படையில் மீட்பு பணிகள் நடைபெற்று வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மீட்பு பணிகளை விரைவுபடுத்த அமைச்சர்கள் திரு.மூர்த்தி, திரு.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

வாய்ஸ்

மழைநீர் வடிவதற்கான பணிகளை மாநகராட்சி முழுவீச்சில் மேற்கொண்டு வருவதாக கூறிய முதலமைச்சர், 20 இடங்களில் மருத்துவ முகாம்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட மக்கள், தேவையான வசதிகளுடன், 3 முகாம்களில், தங்க வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனிடையே ஆத்திகுளம், காந்திநகர், தமிழ்நகர், மகாலெட்சுமி நகர் பகுதிகளை அமைச்சர் திரு.மூர்த்தியும், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சங்கீதாவும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

**************

ராதாகிருஷ்ணன்

தீபாவளி பண்டிகையை ஒட்டி கூட்டுறவு அங்காடிகளில் தரமான பட்டாசுகள் விற்பனை செய்யப்படுவதாக மாநில கூட்டுறவு நுகர்வோர் உணவு பாதுகாப்புத்துறை செயலர் டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நாகையில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் பட்டாசு விற்பனையை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், மாநிலத்தில் வரும் ஆண்டு 35 லட்சம் மெட்ரின் டன் கூடுதலாக நெல் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மாநிலம் முழுவதும் 14 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வேளாண் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 6 ஆயிரத்து 500 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கன மழை பாதிப்பை எதிர்கொள்ளும் வகையில் நாகையில் 380 நியாயவிலைக்கடைகளில் அத்தியாவசிய பொருட்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள அரிசி மூட்டைகளை மழையிலிருந்து பாதுகாக்க 39 ஆயிரம் தார்பாலின் தயார்நிலையில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

**************

திருவாரூர் - வாய்ஸ்

திருவாரூர் மாவட்டம் சவளக்காரன் கிராமத்தில் உணவுக் காளாண் உற்பத்தி குறித்த பயிற்சி இன்று நடைபெற்றது.

இதில் உரையாற்றிய தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் திரு.நீதிமாணிக்கம், உணவுக்காளாண் உற்பத்தி மையம் அமைக்க 50 சதவிகித மானியம் வழங்கப்படுவதாக கூறினார்.

.................. வாய்ஸ்............

**************

குமரி – வாய்ஸ்

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் சுற்றுட்டார பகுதிகளில் நான்காவது நாளாக இன்றும் கனமழை நீடிக்கிறது.

அதிகபட்சமாக குளச்சலில் 9 சென்டிமீட்டர் மழை பதிவானது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

............ வாய்ஸ் ..........

**************

வானிலை

தென்தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது.

இதனிடையே வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக திண்டுக்கல், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் அடுத்த 4 நாட்களுக்கு பரவலாக மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

அரபிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக்காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த 4 நாட்களுக்கு இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**************

வெள்ள பெருக்கு

திருவண்ணாமலை மாவட்டம் தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு, கொடைரோடு உள்ளிட்ட பகுதிகளில் கன மழை காரணமாக நீரோடைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

தேனி கும்பக்கரை அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க இன்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**************

## இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுசூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் பசுமை பட்டாசுகளை வெடிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் கேட்டுக்கொண்டுள்ளார்.

நிர்ணிக்கப்பட்ட நேரங்களில் அதிக ஒலி எழுப்பும் பட்டாசுகளை வெடிக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட, பழங்குடியின மக்களுக்கு உரிய சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருவதாக ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**************

## கிரிக்கெட்

புனேயில் நியூசிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 359 ரன் என்ற வெற்றி இலக்குடன் விளையாடும் இந்தியா தனது 2-வது இன்னிங்சில் சற்றுமுன் 6 விக்கெட் இழப்பிற்கு 166 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக 3ஆவது நாளான இன்று தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த நியூசிலாந்து 255 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்தியா வெற்றிபெற மேலும் 193 ரன் எடுத்தாக வேண்டும்.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர்

நியூசிலாந்து 259

இந்தியா 156

**************

## டேபிள் டென்னிஸ்

ஃபிரான்சில் நடைபெறும் றுவுவு டேபிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் காலிறுதி போட்டியில் இன்று இந்தியாவின் மனிகா பத்ரா – சீனாவின் கியூயென் தைனியை எதிர்கொள்கிறார்.

**************